351

பிஸ்மில்லாஹி.

# திருப்புகழ்ப்பா மாலிகை.

நாகூர்

மகா-ா-ா-ஸ்ரீ மு. ஹாக்கீம் சாகிபு நகுதா

அவர்கள் குமாரராகிய

சித்திரகவி நாவலர்

ஸ்ரீலஸ்ரீ மு. ஆ. சுல்தான் மரைக்காயர்

அவர்களால் இயற்றியது.

---

பிறையாறு பள்ளிவாசல் டிரஸ்டியும்,

கனதனவானுமாகிய

ஸ்ரீமான் மு. முஹம்மதுகாசிம்

மரைக்காயர் அவர்களின்

பொருளுதவியால்

---

இந்நூலாசிரியரது சகோதரராகிய

ஸ்ரீ-ல-ஸ்ரீ மு ஆ. முஹியித்தீன்

அப்துல்காதிறுப் புலவர்

அவர்களின் பார்வையில்

---

நாகபட்டணம்.

... அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1918.

(A7:417
M18.
180268

பிஸ்மில்லாஹி.

# திருப்புகழ்ப்பா மாலிகை.

நாகூர்

மகா-ா-ா-ஸ்ரீ மு. ஹாக்கீம் சாகிபு நகுதா அவர்கள் குமாரராகிய

சித்திரகவி நாவலர்

ஸ்ரீலஸ்ரீ மு. ஆ. சுல்தான் மரைக்காயரவர்களால்

இயற்றியது.

---

பிறையாறு பள்ளிவாசல் டிரஸ்டியும், கனதனவானுமாகிய

ஸ்ரீமான் மு. முஹம்மதுகாசிம் மரைக்காயர் அவர்களின்

பொருளுதவியால்

இந்நூலாசிரியரது சகோதரராகிய

ஸ்ரீ-ல-ஸ்ரீ மு. ஆ. முஹியித்தீன் அப்துல்காதிறுப் புலவர்

அவர்களின் பார்வையில்

---

நாகபட்டணம்,

நீலலோசனி அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1918.

# சிறப்புப்பாயிரம்.

இஃது

பிறையாறு

ஸ்ரீமத் மு, வே, அப்துல் அஜீஸ்மரைக்காயர் அவர்கள் இயற்றிய

கழில் நெடிலாசிரிய விருத்தம்.

---

அருடரு மெய்க்கடவுடிருத் தூதெனவந்துதித்து வளரலை நீர் வைப்பி
விருடருபுன்குபிரிரிய வியனுறு நீன் சுடர் கொளுத்து மெங்கோன் மீதுங்
தெருடரு மன்னவரினத்திலுயர்ந்தவர்கண் மீதுமியற்றேர்ந் துள்ளன்பாய்ப்
பொருடருமிங்கிதவினிய தமிழ்ப் புகழ்ப்பாமாலிகைப் புனைந்தானன்றே.

சீரலரன்னவன்றாஞ் சற்றிவணெடுத்துயாம் விளக்கஞ் செய்வாங்கேண்மோ
பாரலரு மக்கண் முதலமரரும் வந்திறைஞ்சிடு பொற்பதிநேர் தென்னு
கூரலரெம்மொலிதறுகாப் புலவர்களிற் றலைவனெனக் குணிப்பார்ந்தெங்கும்
பேரலருங் கவி செவத்தமக்காய சீரியர்க்கோர் பெருஞ் சங்காத்தன்.

துங்கமிமிர் புலமையர்கண் மணியென்று மதாணியென்றுந் துகடீர் வித்வ
சிங்கமென்று மதுரகவி சலதியென்று மெய்ஞ்ஞான தீப மென்றும்
இங்கரியவபிதானம் பல படைத்துத் தினகரன்போலிணையிற்சோதி
தங்கதிபனா முகியித்தீனப்துல் காதிறுக்கோர் தம்பியானோன்.

மாலவிருமக்காலத்தறிஞ ரொன்றுருவெடுத்து வந்தாலென்னச்
சீலவிறலிசை யொடுவிற்பன சிறப்பிப் பறப்பி நலஞ் சிறப்பினிற்போன்
கோலவிருத ரசாவை மிகமதிக்கத் துதிக்க வெற்றிக்குதிக்க நாளுஞ்
சாலவியலு யவளர்க்குஞ் சீரிய சங்கத்தினுக்குந் தலைவனானோன்.

கச்சிருக்குந் தீப்புலவ ரகமடக்கி யவர் வாயிற் கவி நல்லாப்பு
வச்சிறுக்கு மாண்மையுளோ னடுத்தோரைத் தாளுக்கும் வலியோன் மாறு
தச்சிருக்கும் படியுலகிற் சற்கருமங் களின்முயல்வோ னலர்வான்றீண்டு
மச்சிருக்குந் திருச்சிங்கை நகர்முஸ்லீ மவைதனக்கு மகுடமானோன்.

சுதிகிளரஞ் சிறையறு காலளியடர் தண்டலையருகு சூழுஞ்சால
நிதிகிளர் தொன்னகர் பகுதாதில சொலிகளுயகத்தி னெறிபூண்டுள்ளத்
துதிகிளருங் காதிரியா வழியடுத்திங் கலந்துடைத்த தூயோனன்னோர்
சதிகிளரும் பாக்கியமதலர்ந் தெழுந்து மலர்ந்தருளுங் கலந்துவாழ்வோன்.

கனந் திரண்டோனருங்கலை களத்தனையுங் குற்றமறக் கற்றோன்வாண
ரினந்திரண்டிங் குரைக்கரிய நூற்பொருள் கண்டொரு கொடிக்கு ளியம்ப [வல்லோன்]
மனந்திரண்டவன்பு பொறை நெறியொழுக்கமிகவீகை வாய்மையாவுந்
தினந்திரண்ட மாதவத்தோனுக்கிம் சாஹிபு நகுதாச செல்வனானோன்.

விரைவதியுந் தொடைபுயத்தோ னுயர்குலத்தோ
னிகலிவந்து வீண்வாதாடும்
புரைவதியு மொன்னலரை வென்றவர்க ணோர்பெறமெய்ப்
போதஞ் சொல்வோன்
உரைவதியும் வளநலனு மொத்திருக்கு நாகூர்கண்
ணொளிர்வோன் ஞான்றுந்
தரைவதியுமறிஞர்களிலுயர் சுல்தான்மரைக்காய
தமிழ்ச்சிங்கமே.

இப்புவியோரப்பெரிய நூற்பயின்றவ்
வள்ளல்கணட் பெயுமாறன்பா
லொப்பறுங்கைப் பொருள் கொடுத்து
மெச்சிடவிங்கச் சமுத்தியுரிமைபூண்டோன்
தப்பறுநன் னெறிபடைத்தோ னிதியடைத்தோ
னியலுணர்வுந் தழைத்தோனிந்நூற்
செப்பிடுநம் மெய்ப்புலவனு வந்திமோ
ணவர்களிலுஞ் சிரேஷ்டனானோன்.

அளித்திடும்பூம் பொழிற்பிறைசை முஸ்லிங்கட்
கதிபமன்னனத் துதிமிக்கார்ந்தோ
னளித்திடுமைந் தருக்களுநாண் கொடைசரத்தோ
னடைநலத்தோனருண்மெய்க்கீர்த்தி
தெளித்திடு சௌபாக்யமுளோ னைக்யமுளோன்
விடாதிவனைஞ் சிந்தைநாளுங்
களித்திடுநன் னேயமுளோன் முகம்மது
காசிம்மரைக்காயன் கவின்சீமானே.

இஃது

## இந்நூலாசிரியரின் சகோதரர்

## ஸ்ரீமத் மு ஆ. முகியித்தீனப்துல் காதிறுப்புலவரவர்களால் இயற்றிய

கழிநெடிலாசிரிய விருத்தம்.

---

ஒருபொருடெரிந்த வுறுதெனுங்குறிப்பி லுயர்சமதியத் தொளியாய்
இருபொருள் பெத்தாய பூலருவாகாயிணை பொருளெவற்றினுங் கருவாய்க்
குருபொருண பிகணுயகமாய் வங்குபிரிருட்காட றுத்திஸ்லாம
அருபொருட் பைங்கூழ் விளைத்த காருண்ய அஹ்மதுநபி பதந்துதித்தும்

சிரெடுத்தொருவிற் பலதையுந்தரிசித் தொன்றைப்பல் லவைகளிற்றெரிந்து
பேரெடுத்துலகமாய் கைகணீத்துப் பேருருட்சுடற்சுடர்க்குளித்து
வீரெடுத்தரிய மவுனபூரணமாய் விதிவிலக்கெலையும் விட்டொழித்து
நேரெடுத்துலவுங் குதுபுசொலிக ணிறைவடிவுறுங் கழற்றுதித்தும்

பன்றரு மெழுத்துச் சொற்பொருள் யாப்பணணி பலவிலக்கணவுளத் தான்
பொன்றரு முன்னூற்றெளிஞன் சாபல்யபுதுமறை நெறிவழுவாதோன்
மின்றரும் பன்னூற் றேசிகனணிகொண் மிகுதன வர்த்தகாதிபனன்
நன்றரு நாகை ஷாஹமிதொலி வேணறு மலர்க் கதஞ்சிரம்புனைந்தோன்

பலவளமலம்புஞ் சிங்கைமாநகரிற் பிரபல வணிகரெங்குலத்தார்
யொலமுறத்தெரிந்த சபைக்கு நாயகனுய்த் தலைமையும் புலமையுநடத்தி
நிலவு போன்றுலகிற் றிகழ்ந்த போழக னிற்குணபாசமாரியரிற்
றிலகம்போன்ற வன்றன்னினங்களைக்காக்குந் தீதகன்மனத்தினுத்தமத்தான்

வாமுறுமரிய முறைபல விளக்கி வகுக்கு மெய்ஞ்ஞான சல்லாபந்
தாமுறுமரிய நிறை குறையாது தகுதிசேர் புலவர் நாற்கவிஞர்
சிரமுறுமரிய நான்மணிமாலைச் சிலபல நூற்களுமியற்றிக்
காமுறுமரிய ரத்திநமென்னத் தந்தவன் கல்வியிற்கடலோன்.

புகழியற் சிறந்தநாவலன் சுல்தான்மரைக்காய னென்னும் பொன்மொழியன்
றிகழியற்சிறந்த சர்பிரதாயத்துவ சித்திரப்பாக்களானிறப்பி
இகழியற் சிறந்த மனத்திஞேர்க் காப்பாயினிய செந்தமிழ்ப் புகழ்மாலை
நிகழியற் சிறந்த குணத்தின னளித்தானேர்மை யெஞ்சோதரத்தலைவன்

அணிமிகும் வளங்கட் செறிபொறையாரு ரருமுஸ்லீங்களி னதிபன்
பணிமிகுந்தமிழ்ப் பன்னூலுணர்ந்துலகிற் பாவலனெனும்பெயர்தழைத்தோ
இணிமிகுந் தனவான் முகம்மதுகாசி மரைக்காயனதி திருச்செல்வன் [ன்
மணிமிகுமச்சிட்டிலகெலாம் பாப்பிஞன் மனநிவுடையோனே.

பிஸ்மில்லாஹி.

# சாத்துக்கவிகள்.

இஃது

நாகூர் தர்கா மகா வித்துவான் வா. குலாம்காதிறு நாவலரவர்கள்
மாணாக்கரும் தர்காப் பிரசங்கியுமாகிய
ஸ்ரீமத் க. காதிறு முகியித்தீன் சாகிபு அவர்களால்
இயற்றியது.

தரவு கொச்சகக் கலிப்பா.

நான்குதிக்கும் வேதாந்த நபிகணடு நாயகமாய்த்
தேன்குதிக்கும் வாகைதிகழ் செய்யிதிற சூனபிமேன்
மான்குதிக்கு மும்மாயில் வருந்தி மவுனமடைந்து
நான்குதிக்குஞ் சீர்ததும்பு நாதரொலி மாரவர்மேல்

உன்னிதவெட் சுதைதிட்டி யுலவுமட மாளிகையின்
கன்னியர்கட் பூங்குழற்குக் காட்டுநறு மணப்புகைகண்
மன்னியுல கநிறைவி வானெழவு மாமுகில்கள்
உன்னியுண வாய்ப்பருகி யுமிழ்நீர்ப் பன்னீரா றின்

சீரிருக்கும் பல்வளங்கட் செறியுமிரு நாகூர்வாழ்
தாரிருக்கும் ஆக்கிம்சாகிபு நகுதாத் தவப்பாலன்
பேரிருக்கும் வித்தகநற் பிரபல்ய வர்த்தகனுங்
காரிருக்கு மீசையினன் கல்விகரைக் கண்டோனே.

இலக்கணமு மிலக்கியமு மிதிகாச நூற்பலவுங்
கலக்கமறக் கற்றுணர்ந்தோன் கழத்துறைக ளற்றகுணன்
றுலக்கமுறப் பன்னூற் றொகுக்கும திவல்லமனன்
பலக்கணிதத் தீறமிகுப் பண்புகுக்கு நாற்கவிஞன்

புகழுலவு நாவலன் சுல்தான்மரைக்கான் போதகனன்
றிகழுலவுந் தோத்திரப்பாச் செய்துலகு மெய்ப்புறக
விகழுலவும் பொய்ப்புலவ னிறுமாப் படங்கநித
நிகழுலவு மாலிகையாய் நின்றொளிரத் தந்தனனே.

பிஸ்மில்லாஹி.

இஃது

### சிங்கப்பூர் ஜவுளி வியாபாரம்

### ஸ்ரீமத் யூ. ஹாஜீமுகம்மதுகாசிம் மரைக்காயர் அவர்களால் இயற்றிய

## ஆசிரிய விருத்தம்.

---

திருவருள் விளக்கு நபி நாயக ரறுசேறு
        சேவடி துதித்து மரிய
திவ்ய காருண்ணியகா ரணகுத்து பொலிகட்
        செந்தாளி ரஞ்சுமிக்க
குருவருள் விளக்குமெய்ஞ் ஞானவா ருதித்திகழ்
        கொள்கை மிகு நாகூரினன்
கோமான் றவந்திகழு மாக்கிம் சாகிப் நகுதா
        குமாபாக்கிய யோக்கியன்
இருவருள் விளக்குமென் குருவினது சோதர
        னிலக்கணு லக்கிய நிபுணன்
இறைவன் சுல்தான் மரைக்காயன் செய்யழகிய
        வினிய புகழ்ப்பா மாலிகை
அருவருள் விளக்குபுக ழுலகுமுற் றிலுநிறைந்
        தரியகவி வாணர் மெய்க்க
ஆகாய மேவியோர் கொடியா யுலாவலா
        லதன் மகிமை சொல்வ தரிதே.

### வெண்பா

---

வல்லசுல் தான்மரைக்கான் வாய்திறந்து கற்றோர்முன்
சொல்லுமிந்தத் தோத்திரப்பா தொல்லுலகில்—நல்லவிதப்
பேர்பெறுகச் செய்யும் பெருமை கடைப்பிடியுஞ்
சீர்பெறுகச் செய்யுந் தினம்.

இஃது

பிறையாறு பஞ்சாயத்துமார்களிற் சிரேஷ்டரு மிந்நூலாசிரியரது
மாணுக்கர்களிலொருவருமாகிய

ஸ்ரீமத் மு. முகம்மதுகாசிம் மரைக்காயரவர்களால் இயற்றிய

ஆசிரியவிருத்தம்.

---

மதியலர்ந்தெழ வழைத்தத ஞெடுபகர்ந்தபெம்
மானடி துதித்துமவரின்
மாண்புநில வியமரபி னேங்கு குதூபரசரொலி
மன்னவுலி யாக்களிவர்க
ணிதியலர் சரோருகச்சரணு சரணெனவாஞ்சை
நிமிரு தோத்திரமாலையை
நீணிலமெலாஞ் சபாசென மதித்திடத்தந்த
நிபுணனவனுசென்னிலோ
துதியலர் விவேகனிய லெற்குவருவகலமொழி
தூயவாசிரிய மகிபன்
சொல்வாதமிடுபவர் கடமை வெல்லுவீரனெதிர்த்
துவணர் நாகூரினதிபன்
கதியலர்ந்திலகு மெமதாக்கிம் சாகிபு நகுதாக்
கண்ய தவமைந்த னுலகிற்
கற்றவர் தமக்குளிசை பெற்ற சுல்தான்மரைக்
காயனற் கவிராயனே.

நிரவி மகா கன தனவான்

ஸ்ரீமத் மு. பாவாசாகிபு மரைக்காயர் அவர்களால் இயற்றிய

நேரிசை வெண்பா.

---

சான்றோர்க் குதவுசுல் தான்மரைக்கான் சொற்பயனே
டான்றோர்க் கருணை யமைந்துறுவான் — சான்றுசக
அச்சியற்றித் தந்தா னரும்புகழ்ப்பா மாலை நமர்
உச்சிமேன் மெச்ச வுகந்து.

# திருப்புகழ்ப்பா மாலிகை.

## நபிகணாயகத்தின்பேரில் பதிகம்.

### காப்பு.

நேரிசை வெண்பா.

வெண்டரள வுற்பவத்தின் வேதரிரசூ னபிமேற்
றண்டமிழா லோர்பதிகஞ் சாற்றவே—அண்டபிண்டங்
தோன்றுவதுந் தோன்று தியங்குவது மாக்கியாள்
வான்பொருளே நெஞ்சே மதி.

### நூல்.

கட்டளைக்கலித்துறை.

கருப்பொருண் மன்பதைக் கெல்லா மிருந்தவிக் காசினியிற்
றிருக்கிளர் நூற்குள்ளடங்காத மெய்ப்பொருளே தெரியப்
பெருக்குறுமேலவர் நெஞ்சாசனத்திற் பிறங்குபொரு
ளுருக்கங்கமழு முஹம்மதென்றுருந் தொழும் பொருளே. 1

களிமயி லாய்ஹல ரத்துழிநிற்ப கனிந்துவிழுந்
துளிவியர் வாற்பயன் சொன்னபிமார்களைத் தூயவன்கூர்
நளியிற்படைத்தா னெனும் புகழார்தரு நாயகமே
யளிபெற நாயெற்கருளுநும் பாதத் தணிநிழலே. 2

பரிவாரிறையருணாளும் பொலிந்துறும் பானுலகந்
திரியின்றித் தீட்டிய நாமோ தயக்குரி சின்மகிமை
விரியு மணிப்புய மீதிற் பொருந்திய விற்பனரே
புரியுமனு தின நும்பதக்காட்சியைப் புன்மையெற்கே. 3

மனமே நபிபெரு மான்சொற்கொழுகி வழிபடுவோர்க்
கினமேய சொற்கமும் பேரின்பவாழ்வு மெழிற்சுவன
வனமெற்குழற்கன்னி போகமுந்தேக வசிகரமுந்
தினசீரறிவணி வாய்க்குங்கண்டாய் மடத்திண்ணகமே. 4

தகைசேண்புலத்தும்பர் தற்பணி கேட்பத்தகுதியுள
நகை தூய் ஜிபுரீ இலைய மொழித்த நாதிபரே
பகையாங் கிரிகையிலெய்த்தவன் சிந்தைப்படுமுனஞ்செவ்
வகையிற் றிருத்திற் பரனரு ளுற்பயன் வாய்த்திடுமே. 5

கண்ணியிற்பட்ட கடந்திரி மானுட்களிப்புறவே
விண்ணும் புகழ்பார் விடுத்தவரேதய வித்தகமே
நண்ணிற் பெறுகுவ னெண்ணருட் சீரு நறுந்தவமும்
மண்ணிற் சிறந்த நபிமார்க்கிறை யெனு மாணிக்கமே. 6

பேணிப்பலமுறை வல்லவன் றாதெனப் பெட்புடனே
யாணிப்பொன்னம்பதமேற்றிய ஜின்குழுவுக்காற்றன் மிகப்
பூணிப்பி"னற்கலிமா" வமுதூட்டிய புண்ணியமே
நாணி யிறைமுன நிற்காதெனையோம்பு நன்முதலே. 7

கைபுனைமாட நெருங்கிய சாமுநகர்க்கடையே
பைம்புனை பாந்தட் பணிந்துரை தந்த பரம் பொருளே
பொய்புனைமாக்க ளுறவென்னுறவது பொய்யுறவே
மெய்புனையாக்க மணிந்தார்க்குண் டோகுறைமேதினிலே. 8

மின்னவிர்மேனியு நீட்கரவண்மையு மெய்ம்மறையி
னன்னய மென்மொழி வாயு முறுநவ நாயகயான்
இன்னுந் துயரெனும் வாரிதி மூழ்கியிடைகுவலோ
பொன்னம்பதிக்கொரு பொற்சுடராய் வந்த பூபதியே. 9

அளிகக் குருமணி மௌலிகை தாங்குமறிஞர்களும்
புளிதப்புலவுமிழ்வேற்கர வன்மைப் புரவலருந்
தளியுளங்கொண்டிட வஞ்சலி செய்யுந்தபோமகிமை
களிதரப்பூண்ட முஹம்மது வேயும்மை நம்பினேனே. 10

[முற்றும்.]

# நவமணிமாலை.

காப்பு.

## செந்துறைவெள்ளை.

பவக்கோடறுக்கும் பரனடிவணங்குவாம்
நவமணிமாலை நலனுறும் பொருட்டே.

நூல்.

## நேரிசை வெண்பா.

சீரா யுயிரனைத்துஞ் செய்யுமுனம் வல்லவன்றன்
பேர்நாட்டத் தூற்பவித்த பின்னுலகி—னேராக
முந்த நபிகட்கு முடிவான கீர்த்தியொடு
வந்தநபிப் பொற்றாண் மனம். 1

## நேரிசையாசிரியப்பா.

மாலணி யொற்றைவெண் மணிக்குடை நிழலிற்
சால்படுமாக்களின் றம்முகமலர்த் தெழ
நான்முறைவரம்பு சற்றே நுணங்காக்
கோன்மையிற் புரக்குங் குரிசிலே சிறியன்
கடம்புகுந் துயரங்களைந்துத்
திடம்படவுள்ளந் திருத்துதற்கடனே. 2

## நிலமண்டில வாசிரியப்பா.

கடனிலந்தனக்கோர் கதிர்மணிவிளக்கா
யுடனிகழிலம்படை யோட்டுநன்னிதியாய்
வரும்பல நோய்கண் மாற்றுமென்மருந்தாய்
விரும்புவ கொடுக்கும் வினையகற்பகமாய்

வான்ெறுடுமெதில்வளை மக்கமா நகர்க்கோர்
தேன்ெறுடு வாகை செம்மலப் துல்லா
புண்ணியந் திரண்டொரு புத்திரவடிவாய்
மண்ணினிற் பிறந்த மாமணி விளக்கென
உம்பர்களுடொரு முவந்து வாழ்த்தெடுப்ப
அப்பெறு நல்லன வமைந்தவுள்ளமு
நிலைதருங் கருணை நீடிய நற்பயன்
கலைதரும் பன்மறை கடந்தமெய்ம்மொழி
தெள்ளிய மணியெனத் தென்புயத்தாசருட்
களித்துத் திரைநிதி கடலெனவளப்ப
பாவலராசி பஃறிசை படர
மாவலர்க்கருணை மழைக்கணேக்க
உலகெலாமொழுக வொருதனிச் செங்கோ
னிலவியகாரண நிகழ்த்திடும் வள்ளலாம்
கூண்டிடும் புகழெலாங் குலவியநாயகன்
வேண்டிய பேறெலாம் விருப்புடனளித்தனன்

அதாவன்று—

அருணேதயமென வடகுபிரறத்தின்
திருமறையுலகெலாந் தினந்தழைத்திடவே
வந்துதன்னெளியினல் வகுத்தனன் விசும்பெனப்
பொன்னவிர்வாயாற் புகலுநாயகமே. 3

வஞ்சிப்பா

நாயகமிரு நறுமிணையடி
வாயகமதில்வைத்து வாழ்த்துவோ
ராயுநற்பயனடை வரனுதினந்
தூயவானருந் துதிப்பரென்பவே. 4

மருட்பா.

துதிக்கும்பெருங்கருணை தூங்குமுயர்பாதம்
மதிவருடக்கண்வளர்ந்த மன்னே—வதிநடையி
லுறுநீர்வறண்ட வோடையிற் ருேயஞ்
சிறுகவேபெய்து தெண்ணீரழைத்திடும்
வஸ்தெலாம் வழுத்தும் முஹம்மது
முஸ்தபாப்தத்துணை முடியினிலையே. 5

## இன்னிசை வெண்பா.

நிலைபரங்கொண் டெண்ணத்து நிற்றவை கேட்கிற்
கலைபரவி நிற்கக் கவலுமுய ரெம்பெருமான்
நதியழைத்தார் வான்மதியு நன்குவரச் செய்தார்
சதிநினைத்தார் பெற்றார் சரண். 6

## சவலைவெண்பா.

பெறுவார் மனங்கசிந்து பேணுங்கா லீடில்
நறுதுளிக்கும் பூம்புயத்தி னுதர்
உறுதிநிலை மெய்யகத்தி னுள்ளிய சீர்ஞான
விறுதிநிலைச் சாதனமு மே. 7

## கலிப்பா.

மேதகமுஞ்சன்மான வித்தகமுமற்றுஞ்சீர்
சாதகமுமீடளிக்குந் தன்மையின தாயுளத்தின்
பாதகமும்போக்கிநார் பழிப்பனவுந்தானீக்கு
மூதொளிவிலானவெங்கள் முஹம்மதுற்றசூல்பதமே. 8

## நேரிசைச் சிந்தியல் வெண்பா.

பாதநிலந்தோயாப் பண்பு நிழலவிழாக்
காத மணக்குமெயின் கத்தூரிப்—போதுமுயர் 9
எங்கோ னபிக்கிறைவர்க் கே.

[முற்றும்.]

திருபகுதாது நகர்

செய்யிது அப்துல்காதிர் முஹியித்தீனில் ஜைலானி ஆண்டகை அவர்களின்

# திருநாமத் தொகுதி.

இணைக்குறளாசிரியப்பா.

நாளுங்கருப்புண் ணறைமலர் வீழ்ந்திபூந்
தூளுங் கவிழுந் தடவைகட் செறிந்த
பகுதா தாளப்துல் காதிரெம் மாண்டகை
தொகுதியந் நாமந் துலக்குவான் கேண்மோ

கண்ணியமுடைத்தே
கண்ணியமுடைத்தே

ஒண்ணுறுஞ்சீர்த்தி யுலவிய நாயகம்
கண்ணியமுடைத்தே கண்ணியமுடைத்தே
புண்ணியந் திண்ணிய புரவலர் திதிக்க
விண்ணக மண்ணகம் விளங்குமந் நாமம்

அல்வலிய்யுல்கரீம்
வல்கௌதுல் அகுலம்
அல்பாஜுல் அஸ்ஹபு
வல்குத்புல் அக்தாபு

பர்துல் அஹ்பாபு செய்யிதுல் ஆரிபீன்
பர்துஸ்ஸித்தீகீன் இமாமுல் முஹ்ததீன்

ஹாஜ்ஜத்துல் ஆரிபீன் குதுவத் துஸ்ஸாலிகீன்
சதுருல் முகர்றபீன் ஷைய்குல் முஹக்கிகீன்

மலிகுல் ஜமானி இமாமுல் மகானி
அன்ஜஹாூல் லிஸானி ரஹபுல் ஜனானி

ஷெய்குல் தகலைனி இமாமுல் பரீகைனி
கஹ்புல் ஹாபிகைனி ஐனுல் கௌனி

குத்புல் அறுஸி கௌதுல்வரு
குத்புல் வக்த்தி குத்புஸ்ஸமாயி

நஜ்முல்ஹூதா பத்ருத்துஜா
ஷம்சுல்லுஹா கைருன்னதா

நாயிபுல் அன்பியா நஸீருல் ஔலியா
சாஹிபுஸ்ஸித்க்கி சாதிகுல் அக்வாலி

சாஹிபுல் ஹில்மி
சாஹிபுல் கரமி
சாஹிபுல் ஹிக்கமி
சாஹிபுல் ஹூக்மி

சாஹிபுல் திக்ரி சாஹிபுல் பிக்ரி
சாஹிபுத் தஸ்ரீம் சதுருல் மஜாலீஸ்

சாஹிபுல் ஷரீஅத்தி சாஹிபுத் தரீகத்தி
சாஹிபுல்மஆலி சாஹிபுல் முகாஷபத்தி

சாஹிபுஸ் ஸிம்தி சாஹிபுஸ் ஸம்தீ
சாஹிபுல் கறுமத்தி சாஹிபுல் கதமி

அல்மஹ்பூ புஸ்ஸூப்ஹானி வல் குத்புற்றப்பானி
அல்இமாமல்ஹசனி வல்இமாமுல் ஹூசைனி

செய்யிதுமுஹியித்தீன் செம்மலெம் மாண்டகை
மெய்தவ நாமம் வியந்துரைப்போர்க்குச்
சிருஞ்செல்வமுஞ் செய்தவப் பேறும்
மாறுதெஞ்ஞான்று மானிலத்துறுமே.

## நேரிசை வெண்பா.

அன்புடை மெய்ம்மொழியு மற்புதந்தி ஞாமுது
மின்புடையோய் நும்பெருமை யெற்றென்பேன்—புன்மையுறு
மேழையடியே னிகத்தும் பரத்துமிகக்
கோழையுறு தாள்கவருட் கொண்டு 1

விற்பனையா லுற்றபொருண் மெய்மறப்பாற் காத்தெறுழின்
கற்பனையு மாற்றிக் கனவாக்கும்—சொற்பயன்சீர்
துன்புடைய வென்றன் றுயரகற்றி மெய்யாக்கம்
அன்புடைய கௌதே யருள் 2

அன்னை வயிற்றி லருமறைமுப் பாரோதிப்
பின்னை வயிற்றிழிந்து பேரலகை—வின்னப்
படச்செகுத்து நன்முதலே பாரொவிமார் பொற்றோள்
தடந்தோய்த்த செந்தாட் சரண். 3

உண்டுமிழ்ந்த கவ்தாரி யும்பறவை துண்டிரண்டும்
பண்டிருந்த வாறெழவே பண்ணியகோன்—முண்டகத்தாள்
காண்டனரே கண்ணுடையார் காணார் விழியற்றார்
பூண்டன ரென்றென்றும் பொன் 4

பேறுடைய மாண்பும் பெருந்தவமுஞ் சீர்சான்ற
வீறுடையாய் சாந்த விழியுடையாய்க்—கூறுங்கால்
மண்ணகத்தும் விண்ணகத்து மாண்புற்றோர் நும்போல
வெண்ணகத்து மில்லை யினி, 5

கள்ளர் பயமிகுத்த கர்லை வணிகனரு
முள்ளத் தியக்க முணர்ந்தொருகால்—கள்ளவிழும்
பூந்தாட் குறடெறிந்தே பொன்றாதுக் காத்துமணல்
பாந்தட் பயமகன்றப் பண்பு. 6

ஆன்ம வுலகத் தணிபிரிந் தூடுற்றக்
கோன்மையினை யென்னென்று கூறுவேன்—பான்மைமிகும்
ஞானவருட் டவமு நட்பும் பொறைவாய்மை
மோனச் சுடரூருத்து முன் 7

வானும் புவியு மலைகட லு மற்று முயிர்
தானும் பணிகேட்குந் தன்மையுள—நோன்மை
யழியாப் பெருங்கருணை யண்ணலே பொய்யா
மொழியுடைய ணுக்குமெனை முன். (8)

அருளே தெளிதேனே யாரமுதே மௌனப்
பொருளே யிருலோகப் பேறே—தெருளே
யுபயவிழி நன்னோக் குறுங்கருணை யாக்க
மபயம்பயமெற் காம். (9)

ஹாஷீ மரக்கிளையிற் கான்றலர்ந்து பொற்கமலத்
தாசீ மகள்வழியிற் றுனுதித்தே—ஆசயமாய்
காந்தரபு சாலிஹூதங் கான்முளையாய் வந்துலக
வேந்தல்கெள துல்லலைல மே. (10)

முற்றும்.

## இந்துஸ்தானி.

### பல்லவி.

நல்லமருந் திம்மருந்து குரு
நாதன்முஹயித்தீ னெனுமருந்து நல்ல

### சரணங்கள்.

என்னுயிரன்னமருந்து சதா
இருக்கநலந்தரு மின்பமருந்து
பொன்னுல குற்றமருந்து எப்
புவனமும்போற்றப் பிறந்தமருந்து நல்ல (1)

ஐம்புலத் தாசையைநீக்கும் நல்ல
ஆரணவாகமத் தறிவைவளர்க்கும்
பூம்புயலாமனு யார்க்குங் கெடும்
புந்தியைப்போக்கிப் புகழ்பெயராக்கும் நல்ல (2)

காயங் கடைத்தேறப்பண்ணும் எக்
கருணைநயமுங் கனிந்துறமின்னும்
ஆயுமருந் தெலாம்பின்னும் சத்
தடங்கியொடுமிவ் வமிழ்தத்தின்முன்னும் நல்ல (3)

பாபமறுக்கு மருந்து பந்த
பாசங்களெல்லாம் பறக்குமருந்து
சாபங்க ளோட்டுமருந்து ஜென்ம
சாபல்யமென்ன தழைத்தமருந்து நல்ல (4)

குத்துபுல் லவுலியாநாதம் யார்க்கும்
கோதறச்செய்யுங் குணரசவாதம்
சத்துசித் தானந்தபோதம் சுல்தான்
சாஹிபுல்வக்த்தி சரோருகசாதம் நல்ல (5)

ஷம்சுல்ஹுஹா வெனுஞ்சாதி ரத்ன
சாஹிபுஸ்ஸித்கி சரணச்செஞ்சோதி
கம்மின் கறுமாத்திஞதி உயர்
கௌதுல்வறுவெனும் கருணைசித்தாகி நல்ல (6)

முற்றும்.

## நாகூர் நகர்

குத்புல்மஜீது செய்யிது அப்துல்காதிர் ஷாகுல்ஹமீது
கஞ்சஸவாய் நாயகம் அவர்களின்பேரில்

# இருபதிற்றுத்துறை.

### காப்பு

வெண்பா.

ஒருமா முதல்வனரு ளுண்டெனக் கென்று
மிருமா வுலகாதி யேற்கு—மிருபஃது
பாவாங் கலித்துறையான் பாடவே நாகைக்கோன்
மாவார் கழன்மாட்டு மன்.

### நூல்.

கட்டளைக் கலித்துறை.

கண்டுங் கதலியுங் கற்பகச் சோலையுங் கான்மலரும்
வண்டும் பழனமுஞ் சூழ்நாகை யூரெங்கள் வள்ளலெனுந்
தொண்டுபுரிந்தேதன் றுயர்களைவான் பொருட் டெய்யபதங்
கண்டுமனச் சிரங்கொண்டு பணிப்பதெக் காலமனே. (1)

அன்புற்ற நெஞ்சமு மாதாரமாக்க மரும்பொருளு
மின்புற்ற வாய்மையு மென்றா ளெழிலுமிறையருளும்
வன்புற்ற மாதவஞ் குன்றாதம்மான வரோபதியே
துன்புற் றுழன்றய ராதுபொற்பாதத் துணையருளே. (2)

ஈன்றாரிடும் பந்தனேரிட்டு நோக்கி யெரித்தகன்று
சான்றாண்மை பெற்றுயர்மா மதியேசர ணாரவிந்தந்
தான்றாழ் பவர்க்கரு ணேசாபரணத் தகைமையினைத்
தேன்றாழ் வரைத்தட நாகைநராதிப தேசிகமே. (3)

பொன்னே யமரர் புகழ்பொரு ளேயரும் பூம்புயலே
மின்னே மனோகர மாமணியே விரைபார்மகுட
மன்னே மனோகுல மின்னே யொழித்து மதிவதன
வன்னே புரந்தரு ளென்னை நெடிய வகலிடத்தே. (4)

மாருப் பெருந்தயை செய்யுங் குணாலய மாணிக்கமென்
றூருக் குறைசொல்லி வாடிநும் பால்வந்த மூதுகெஞ்சுந்
தேருச் சிறியன் படுந்துயர் யாவுந் தெரிந்திருந்து
மேரு வழக்கென் றிருப்பதென்? னாகைச் செழிவிறையே. (5)

வாக்குந் திறமும் வளர்மறை ஞானமும் வாரருளுந்
தேக்குங் கருணைமுஹ ம்மதன்னார் திருப்பேரரெனப்
பூக்கும் பொழிற்றட நாகை வந்தாளு நற்பூபதியே
காக்குங்கட னுமக்கல்லது வேறு கருதிலமே. (6)

சொல்லான் மனத்தாற் செயலாற் றொழுதுநுந் தொண்டுசெய்யார்
பொல்லாரென் றோதலும் வேண்டுங்கொலோ? திருப் பொன்னடி
நல்லாருடன்பானு நல்லானெனும்பெயர் நண்ணலுநும் [க்கு
மல்லானுறுவது யாண்டோ தென் னாகைக்கதிபதியே. (7)

பருவரலாற்று யருற்றுடல் வாடிப்பதை பதைத்துத்
திருவார்பத மாட்டடைந்தன னடியேன் றினந்தழைக்க
குருவார் மருந்தளித் தாட்கொள்ளற் கென்ன குறையுளதோ
மருவார் மலர்ப் பொழிற்சூழ் நாகைவாழு மனோன்மணியே. (8)

எக்குற்றமாயினு நீக்குதற்கென்ன விருடிகனின்
முக்குற்ற நீக்கிய ஞானவரே தய மும்மணியே
திக்கற்றவன்படும் பாடுபடாதருட் செய்கவென்பான்
மிக்குற்ற தேம்பொழிற் சூழ் நாகைவாழும் வியன்மணியே. (9)

கெடுவான் பிறர்க்கேடு ஞற்றுவன் ஞாலக் கிளர்மொழிதான்
நடுவா னெனைகயோ? வறுப்பா னதேயென்ப நன்கெழுவான்
படுவா னுயர்புகழ் நும்பாதத் தூசின் பலன்றருக
மடுவார் பொழிற்றடஞ் சூழ்நாகை நன்னகர் மாதவமே. (10)

பொன்போன்ற தேகமு மெய்ம்மறை நாவும் புனிதமுறுந்
தென்போன்ற கற்புந் திருவிளை யாக்கமுஞ் சின்மயமும்
என்போன்ற பாவிக் கிரங்குங் கருணை யிருவிழியு
மின்போன்ற தூய்மலர்ப் பாதமுமுள்ள விதுவமுதே. (11)

கல்லார்க்கொரு சொல் லெனவேமதிப்பர் நயமில் லென்போற்
பொல்லார்க்கோ ராயிரம்போ துரைத்தாலும் புலைத்தனமே
யல்லா லுயர்குண மெவ்வாண்டுள மோவருந் தவத்தின்
வல்லார்க் குயர்ந்த வடிவே திரு நாகைவாழ் வரசே. (12)

பெண்ணும் பொருளும் புவனமும் பேதகப் பொய்யுறவுங்
கண்ணுங் கருத்துமடி யேனென்பாலே கவிந்துறிலோ
எண்ணுந் தனமு மிணையல்லவே யதற்கென்செய்குவேன்
வண்ணந்தரும் பொழிற்சூழ் நாகைவாழு மகிபதியே. (13)

எஞ்சாப்புகழ்வள ரீறிறசூல் மஹ்மூதமொழிற்
றஞ்சாப் பெருங்குலமா பகுதா தண்ணளேரன்றலேயென்
மிஞ்சாகுலமறத் தெஞ்ஞான்றும் ஞானவிழி திறந்தே
யஞ்சாப் பெருந்துணை நந்தாள ளித்தருளாண்ட கையே. (14)

அருளேதியாகத் தருங்கலையே யமரோருலகப்
பொருளேபுவனம் புரந்தருட்செய்புஞ்செம் புண்ணியத்தின்
றெருளே தியானத் தியல்வழுவாதுறச் சீருலக
மருளே யொழித்தென்னையாட்கொள்ளவேண்டு மனோகரமே (15)

எண்ணத்தொலையாப் பிணியால் வருந்தியிடைந்துருகி
விண்ணத்து நீள்வரை நாகை வந்தார்க்கும் விருணமுண்டோ
தண்ணொத்த நும்பதசேவை செய்யாரித்தரணியிலே
மண்ணொத்தவரன்றிப் பின்யாது மாபயன் வாய்ப்பதுவே (16)

என்னுயிரென்ன வெழிலே கருணைக்கிருப்பிடமே
தன்னயம்வேண்டிச் சிசுஹத்தி, சூனியந்தான்புரிவோர்
பன்னயமற்றுத் தவிப்பாரிகத்தும்பரத்து மென்ப
நன்னயம்பூத்தமதியே யொலிகளி னாயகமே (17)

வல்லானெடுத்ததேவாய்க்கா லென்பாரந்நீர் வற்றிச்சற்று
நில்லா தொழிவதைக் காணுமொரு நிகரற்ற வுண்மை
யல்லாற் பிறிதொன்று மாகுங்கொலோ விவ்வவணியிலே
செல்லார் பொழிற்றடஞ்சூழ் நாகைவாழுஞ் சிகாமணியே (18)

அரணாம்பரமே யெளியேம் தமக்கின்னலாற்று பர
ரிரணாம்பரமே மஜ்லியர் மாயவிகல்புரிந்தக்
கிரணாம்பரமே யொலிகட்பிரானெனுங் கீர்த்தியுற்றோய்ச்
சரணாம்பரமே புகுந்தன னாயேன் றழைத்திடவே (19)

மாணிக்கப்பூரசன் குத்தூசருளிய மைந்தரெனப்
பேணிப்பதம் பணிவோர்க்கருணாயக பேதைமுகம்
பாணித்தலின்றியே நோக்குந்தயாளப்பயன் குலவக்
காணிப்பிடர் துயர்போ யொழியக் கடைக்கண்ணருளே

முற்றும்.

பாப்பாவூர்

## ஹலரத்து செய்யிது குவாஜா செய்கு அலாவுத்தீனி

## க்ஷிஸ்திவலிய்யுல்லாஃ அவர்கள்பேரில்

# பதிகம்.

குறள் வெண்பா.

துணையாம் பதிகமொன்று சொல்லவெற் கென்று
மிணையற்ற வல்ல, விறை.

நூல்

கட்டளைக்கலித்துறை.

பொய்ம்மை யகற்றிப் பொறிபுலனாசையும் போக்கியித
மெய்ம்மை தவநிறையோகக் கண்காட்சி விரிச்சுடரி
ஊனம்மை மனத்தினராய் க்ஷிஸ்தியா வென்னரும்வழியில்
வையம் பணிந்துறுஞ் செய்கு அலாவுத்தீன் மாணிக்கமே (1)

ஆரிக்கம்போன்ற தருகாவின் மாக்களனுதினமும்
வாரிக்கிணையென வந்தே பணிகுவர் வள்ளலுந்தாட்
கோரிக்கைபோலவருள்ளங்குளிரக் கொடுத்தருட்சீர்
மாரிக்கிணையுறச்செய்யுங் குணாலய மாணிக்கமே (2)

துன்பால் வருந்துமடியேன் சுகம்பெற்றுத் தூய்மையுற
வென்பா லிரங்குக வென்றுயர்தீரவீரேழுலகு
மன்பாற்கருணை பொழி முகிலேயென்றனுயிரே
மன்பான் மிகைத்த தவத்தோரடிதொழு மாணிக்கமே (3)

திருந்தாதவல்வினை நோய்பல யாவையுந் தீர்க்கவரு
மருந்தன்ன தீபிகை நெய்யு நறும்புகை மண்டுகளும்
அருந்துமெவர்க்குங் குறையேது நந்தருகாவகத்தில்
வருந்தாரிகத்தும் பர த்தும்பெருந்தவ மாணிக்கமே (4)

காரணத்தாலியல் காரிய மெய்ந்நிலை கண்டுணர்ந்துப்
பூரணத்தின்பம் பொலிந்துவிளங்குநம் பொற்குரிசில்
ஆரணத்தோதைமுழங்க வறிஞராணியணியாய்
வாரணத்தொப்பக் களித்திசைபாடுவர் மாணிக்கமே (5)

காமம் வெகுளி மயக்கமித்தாதி கடிந்துயர்ச்சீர்
நேமத்துறைவழுவா தெனையாண்டருணித்த நித்தஞ்
சேமந்தருந் திருப்பாப்பாவூர்தன்னிற் செழித்திலங்கும்
வாமம்பட ரெழில் செய்கு அலாவுத்தீன் மாணிக்கமே (6)

அருளேமடியர் சரண்புகும் பெற்றியமைந்ததவப்
பொருளே பொறைநிறை மாமதி யேபுகழ்ப்பூம்புயலே
தெருளே சுகானந்தவாரியே சேமததிரு நிதியே
மருளேதம் போக்கு மெளியேன் சுகம்பெற மாணிக்கமே (7)

ஒன்றேபலவென வொன்றியுமொன்று துபபலமாய்
நின்றேபணித்துலகாளும் பரம்பொருணீட் கருணைக்
குன்றே யொலிகட்பிரானே சதுமறைக் குஞ்சரமே
மன்றே மிளிர்மதிச் செய்கு அலாவுத்தீன் மாணிக்கமே (8)

தண்பூத்த பொன்மலர்ப்பாத மெஞ்ஞான்றுந் தலைமுகமென்
கண்பூத்திலங்கவுஞ் செய்யுகப் புண்ணிய கார்முகிலே
விண்பூத்த தாரகை நாப்பண்மதியென மேவுதவ
மண்பூத்த பேரொலிமார்களினாயக மாணிக்கமே (9)

எண்ணியவாறெனக் கெல்லாங்கனவி லெடுத்துரைத்துப்
பண்ணிய செய்வினை யின்னேரெனவும் பகர்ந்தருட்செய்க்
கண்ணிய திண்ணிய புண்ணியமே செங்கருணை நயம்
மண்ணிய சீர்த்தியுறுஞ் செய்கு அலாவுத்தீன் மாணிக்கமே (10)

முற்றும்.

மலாக்கா பெரிய மலையில் மறைந்திராநின்ற

ஹலரத்து ஷெய்கு இஸ்மாயில் வலிய்யுல்லாஃ

அவர்கள்பேரில்

# பதிகம்.

---

## காப்பு.

### குறள்வெண்பா.

எதற்குந் துணைபுரிந் தேற்பனவு மீவோய்
இதற்குந் துணையா யிரு.

## நூல்.

### நேரிசை வெண்பா.

வானே திருவார்ந்த வள்ளலே மெய்ம்மறையின்
றேனே மனநிறைந்த தெள்ளமுதே—கோனே
பரிதியொளி வெண்சுதையம் பற்றிலங்கு மாடப்
பெரியமலை சாஹிபொலி யே. (1)

பூரிக்க வுள்ளம் புலன்கடந்து பொய்போக்கி
யாரிக்க மானதிரு வண்ணலே—வாரி
திரை கொழிக்கு நித்திலமுந் தேனுகுக்குஞ் சோலைப்
பெரியமலை சாஹி பொலி யே. (2)

மாணிக்க மென்றுலகோர் வாழ்த்தெடுப்ப வந்த நந்தாட்
பேணிச் சிரங்கோடற் பேருளாங்—காணி
யுரிய தவச்செய்கு இஸ்மாயி லொலியென்னும்
பெரிய மலை சாஹி பொலி யே (3)

நிலாக்கான் ஞெளிர்மாட நீட்சிகர வெற்பு
மலாக்கா நகர் புரக்கு மன்னே—விலக்காத்
துரியநிலை மெய்யாக்க மென்றுதவு மேற்குப்
பெரியமலை சாஹி பொலி யே (4)

நன்மை பயக்கு நனிபயக்கு நல்லனவுந்
தின்மை பபவாத் திருவருளே—பன்மை
யிரியமனமொன்று யினிதோங்கு வான்செய்ப்
பெரியமலை சாஹிபொலி யே. (5)

நாகந் தவழ்நாக நன்குவளர்ப் பூங்காவி
னாகந் தவழ்ந்தும்பா னண்ணியது—நாகம்
பிரிந்துமுக முற்காட்டிப் போதருதற் செய்தப்
பெரியமலை சாஹிபொலி யே. (6)

வாழ்த்தாத வாயுநும் வண்மையினை யேற்கத்
தாழ்த்தா தவர்செவியுந் தன்னிலைக்கு—வீழ்த்தா
மரமென்போங் கற்றுளையு மன்றுமே யென்போம்
பெரியமலை சாஹிபொலி யே. (7)

துன்பந் துடைக்குந் துயரகற்று மேகாந்த
மின்பம் பயக்கு மிகபரமு—மன்பு
விரிகருணை நன்னோக்க மேவுங்கா லென்பால்
பெரியமலை சாஹிபொலி யே. (8)

பாடுவார் நும்புகழைப் பல்லோரணியணியாய்
நேடுவார் தங்குறைக ணீக்குமென—நாடிப்
பரிவார்ந்து வேண்டுவனப் பண்ணுமுயர் சீர்சால்
பெரியமலை சாஹிபொலி யே (9)

வாழ்வென்ன நும்மருளே வாய்க்குங்கா னாயேற்சுந்
தாழ்வுந் தரித்திரமுந் தான்போகும்—சூழும்
விரிச்சுடரார் விண்ணகத்து வீங்கு புகழ்மேவும்
பெரியமலை சாஹிபொலி யே. (10)

முற்றும்.

பிஸ்மில்லாஹி.

# "முக்கிய அறிவிப்பு."

## ஹக்கீகத்துல் இன்ஸானிய்யா

என்னும்

## மெய்ஞ்ஞான பொக்கிஷம்.

இப்புத்தகத்திலடங்கிய விடயங்களியாவும், தலீல் ஹதீது களுக்கு ஒற்றுமையாகவும், நாயகமாகிய இமாம்களது திருவசனங்களை ஆதாரமாய்க்கொண்டும், மெய்ஞ்ஞான முத்தியடைந்த மஸ்தானிகளின் பாடல்களை மேற்கோளாகக்கொண்டும், ஒவ்வொரு முஸ்லீம் சகோதரர் களுங் கடமையாக அறியவேண்டிய; தௌஹீது, மஃறிபா, ஷுஹூது முதல்வன விடயங்களில் முக்கியம் அறியவேண்டிய அரியவிடயங் களை அதற்கான ஹிக்காயத்துகள், சுவால் ஜவாபுகளோடு மிக்க தெளி வான செந்தமிழ் நடையில் வசனரூபமாக எழுதப்பட்டு அச்சாகிவரு கின்றது. ஆனுல் அப்புத்தகம் மிக்க விரைவில் வெளிக்கிடப்படுமென் பதை எமது சகோதரர்களறிவதோடு ஏழையாகிய எமது ஹக்கிலுந் துஆ செய்வார்களாக.

நாகூர், } இங்ஙனம்,

5—8—18. } மு.ஆ. முஹியித்தீன் அப்துல்காதிறுப் புலவன்

கிரந்த கர்த்தா.